Stadt Bern

Alters- und Versicherungsamt

# குறைநிரப்பு உதவிகள் (EL) AHV மற்றும் IV க்கானது
# Ergänzungsleistungen (EL) zur AHV und IV

***குறைநிரப்பு உதவிகள் என்றால் என்ன?***

சுவிஸ் சமூகக் காப்புறுதியில் குறைநிரப்பு உதவிகள் என்பது ஒரு முக்கிய பங்கு வகிக்கின்றது. எந்தளவில் சட்டரீதியான நிபந்தனைகளுக்கு உள்ளடங்கியுள்ளது என்பதைப் பொறுத்து,

- வயோதிப மற்றும் கைவிடப்பட்டவர்களுக்கான- அல்லது உடல் ஊனமுற்றவர்களுக்கான காப்புறுதி ஒரே வகையானது (AHV- oder IV-Rente) - இவைகளைப் பெறுவதற்கு ஒரு சட்ட உரிமை உள்ளது.

***குறைநிரப்பு உதவிகளைப் பெறுவதற்கு யாருக்கு உரிமையுள்ளது?***

AHV அல்லது IV உதவிகளைப் பெற்றுக்கொள்ளும் பெண்கள் மற்றும் ஆண்கள், அவர்களது ஓய்வூதியம் மற்றும் வருமானம் சமூகத்தில் வாழத் தீர்மானிக்கப்பட்டுள்ள ஆகக் குறைந்தளவு தொகையிலும் பார்க்கக் குறைவாக இருந்தால் குறைநிரப்பு உதவிகளைப் பெற்றுக்கொள்வார்கள்.

சமூகத்தில் வாழ்வதற்கான ஆகக் குறைந்தளவு தொகை, வித்தியாசமான சட்டக் கணிப்பீட்டு ஒழுங்குவிதிகளின்படி தீர்மானிக்கப்படும். எவராவது தமக்கு குறைநிரப்பு உதவியைப் பெற்றுக்கொள்ள உரிமையுள்ளதா என்பதை அறிய விரும்பினால், பின்வரும் மேலெழுந்த ரீதியான கணிப்பீட்டு விதியை மாதாந்த வருமானக் கணக்கெடுப்பிற்குப் பாவிக்க முடியும்:

முழு வருமானம்
- மருத்துவக் காப்புறுதிக் கட்டணம்
- வீட்டுவாடகை

--------------------------------

= நிகர வருமானம்

===================

தனியாட்களுக்கான மாதாந்த நிகர வருமானம் ஏறத்தாழ 1'634 பிராங்குகளுக்கு குறைவாக மற்றும் தம்பதிகளுக்கான மாதாந்த நிகர வருமானம் ஏறத்தாழ 2'451 பிராங்குகளுக்குக் குறைவாகவும் இருந்தால் குறைநிரப்பு உதவிகளைப் பெறுவதற்கான சந்தர்ப்பம் உள்ளதா என்பதை விளக்கிக் கொள்ளுமாறு விதந்துரைக்கப்படுகின்றது. குடும்பத்தில் பிள்ளைகள் இருந்தால் மேலே குறிப்பிட்ட தொகை ஒரு பிள்ளைக்கு 285 – 855 பிராங்குகளாக அதிக-ரிக்கும்.

ஒருவர் பராமரிப்பு நிலையத்தில் வாழ்ந்தால், வேறு விதிமுறைகள் நடைமுறையிலிருக்கும். பேர்ண் நகர AHV-கிளைநிலையம் (AHV-Zweigstelle der Stadt Bern) இதுகுறித்த விபரங்களை அறியத்தரும்.

***சொத்துக்கள் இதில் என்ன பங்கு வகிக்கின்றன?***

2021 இல் சொத்துக்களுக்கான உயர் எல்லை அறிமுகப்படுத்தப்படுகின்றது. தனியாட்களுக்கு 100'000 பிராங்குகளுக்கு மேல் இருந்தால், குறைநிரப்பு உதவி பெறுவதற்கு உரிமையில்லை. தம்பதிகளைப் பொறுத்தவரை இதன் அளவு 200'000 ஆக அமைந்திருக்கும்.

முழுச் சொத்துகளிலிருந்தும் (உ.ம். சேமிப்புக்கணக்கிலிருந்து கிடைக்கும் வட்டி) கிடைக்கும் வருவாய், மிகுதி வருமானத்துடன் சேர்த்துக் கணிக்கப்படும்.

சொத்துக்களிலிருந்து தனியாட்களுக்கு 30'000 பிராங்குகள் மற்றும் தம்பதிகளுக்கு 50'000 பிராங்குகள் கழிக்கப்படும். பிள்ளைகளுள்ள குடும்பத்திற்கு சொத்துக்களுக்கான கழிவுத்தொகை ஒரு பிள்ளைக்கு 15'000 பிராங்குகளாக கழிக்கப்படும். மிகுதித்தொகை யிலிருந்து வழமை-மயாக 10% எடுக்கப்படும். இந்தத் தொகை EL-கணிப்பீட்டின்போது ஒரு மேலதிக வருமானமாகக் கணிப்பிடப்படும் (மாதாந்தக் கணிப்பீட்டிற்கு அதிலிருந்து 1/12).

சொந்த வீடுகளில் வசித்தால் அவற்றின் (உத்தியோகபூர்வமான) பெறுமதி 112'500 பிராங்குகளுக்கு அதிகமானால் அவை ஏனைய சொத்துக்களுடன் சேர்க்கப்படும்.

***குறைநிரப்பு உதவிகள் மீளவும் திருப்பிச் செலுத்தப்பட வேண்டுமா?***

2021 க்குப் பின்பாக அமுலுக்கு வரவுள்ள குறைநிரப்பு உதவிகள்-EL மீள்திருத்திய சட்டத்தின்படி, ஒரு நபர் குறைநிரப்பு உதவிகளை அவர் இறப்பதற்கு முன்பான இறுதிப் பத்து வருடங்களுக்குப் பெற்றிருந்தால், அவர் விட்டுச் செல்லும் சொத்துக்களிலிருந்து அவற்றைத் திருப்பிச் செலுத்த வேண்டியிருக்கும். தம்பதிகளைப் பொறுத்தவரை இரண்டாவது நபரும் இறந்த பின்னரே திருப்பிச் செலுத்த வேண்டியிருக்கும். விட்டுச்செல்லும் சொத்துக்களில் ஒரு கழிவுத் தொகையாக 40'000 பிராங்குகள் அனுமதிக்கப்படும்.

***குறைநிரப்பு உதவிகளுக்கான EL-விண்ணப்பங்களை யார் பெற்றுக்கொள்வார்கள்?***

நீங்கள் வசிக்கும் இடத்திலுள்ள வயோதிப மற்றும் கைவிடப்பட்டவர்களுக்கான காப்புறுதிக் கிளைநிலையம் குறைநிரப்பு உதவி விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ளும். பேர்ண் நகரத்தில் வயோதிப மற்றும் கைவிடப்பட்டவர்களுக்கான காப்புறுதிக் கிளைநிலையமாக வயோதிப- மற்றும் காப்புறுதித் திணைக்களம் (Alters- und Versicherungsamt) உள்ளது.

***மேலதிக கேள்விகளுக்கு யார் பதிலளிப்பார்கள்?***

பேர்ண் நகரத்தில் வசிக்கும் ஓய்வூதியம் பெறும் பெண்கள் மற்றும் ஆண்கள், பேர்ண் நகர வயோதிப மற்றும் கைவிடப்பட்டவர்களுக்கான கிளைநிலையத்தைத் தொடர்பு கொள்ளலாம். அங்கு பணியாற்றும் பெண்கள் மற்றும் ஆண்கள் குறைநிரப்பு உதவிகள் குறித்து விபரமாகப் பதிலளிப்பதுடன், குறைநி ரப்பு உதவிகளைப் பெற்றுக்கொள்வதற்கான உரிமைகளைப் பரிசீலித்து அதைப் பெற்றுக்கொள்ள உதவிபுரிவார்கள்.

**AHV-Zweigstelle der Stadt Bern**
**Bundesgasse 33**
**3011 Bern**

**தொலைபேசி: 031 321 66 89**
**மின்னஞ்சல்: ava@bern.ch**

***குறைநிரப்பு உதவிகள் குறித்து நீங்கள் மேலதிகமாக அறிந்து கொள்ள விரும்புகின்றீர்களா?***

பேர்ண் நகர AHV-கிளைநிலையம் ஒழுங்காக தகவல் நிகழ்வுகளை நடத்தி வருகின்றது. இதில் பங்கேற்போர் குறைநிரப்பு உதவிகள் பற்றிய முக்கிய புள்ளிகள் குறித்து அறிந்து கொள்வதுடன், தொழிலுக்குப் பின்பான காலகட்டத்தில் எவ்விதமான வசதிகளை நகரம் வழங்குகின்றது என்பதையும் தெரிந்து கொள்ளலாம். இதன்போது கேள்விகள் கேட்பதற்கு அதிக சந்தர்ப்பம் கிடைக்கும் அல்லது ஒரு சிறிய ஆலோசனை யைப் பெற்றுக்கொள்ளலாம்.
இதன் விபரங்கள் பின்வரும் இணையத் தளத்தில் வெளியிடப்படும்: www.bern.ch/ava